# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 4
# 2021, ஜூன் 23, புதன்கிழமை
# பிலவ, ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு – 2052

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் காலை **10.00** மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**" வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி."**

(உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் நல்வாழ்விற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது. )

## 1. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )

### (1) 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்கள்.

மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

### (2) 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்

22.6.2021–ஆம் நாளன்று திரு. தா. உதயசூரியன் அவர்களால் முன்மொழிந்த கீழ்க்காணும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். (இரண்டாம் நாள்):

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

> '2021–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21–ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'."

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்:

13. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
14. திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
15. முனைவர் த. இனிகோ இருதயராஜ்
16. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
17. திரு. ம. சிந்தனை செல்வன்
18. திரு. நயினார் நாகேந்திரன்
19. முனைவர் டி.ஆர்.பி. ராஜா
20. திரு. ஜி.கே. மணி
21. திரு. கு. செல்வபெருந்தகை
22. திரு. எடப்பாடி K. பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர்

பேரவை பிற்பகல் **3.34** மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் **2021–ஆம்** ஆண்டு ஜூன் **திங்கள் 24–ஆம்** நாள் **வியாழக்கிழமை** காலை **10.00** மணிக்குக் கூடும்.

**கி. சீனிவாசன்,**
**செயலாளர்.**